# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044371

1. District : கோவை மாவட்டம் PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் Year: 2023 ஆண்டு FIR No.: 2/AC/2023 மு.த.அ. எண் Date: 30.3.23 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: in 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல் : Date to நாள் வரை : 1) December 2022 2) 9.3.2023
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை : 3) 27.03.2023 at 11.00hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.3.2023 Time நேரம் : 07.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.3.2023 Time நேரம் : 08.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 20 கி.மீ வட மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சிக்கம்பட்டி ஊராட்சி அலுவலகம், தொண்டாமுத்தூர் (Tk), கோவை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. ஆறுமுகம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சீராமலிங்கம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கட்டட தொழில் (g) Address : முகவரி 9C1, மாகாளியம்மன் கோவில் வீதி, சிக்கம்பட்டி, தொண்டாமுத்தூர் (Tk), கோவை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. கௌரி சங்கர், செயலாளர், சிக்கம்பட்டி ஊராட்சி அலுவலக தொண்டாமுத்தூர் (Tk) கோவை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.18(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவுபோன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு வழக்கு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the investigation / Refused investigation / transferred to PS .................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே கண்ட முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுகளுக்குட்பட்ட குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுத்த .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. முறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக பதிவுசெய்யப்பட்டிருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. [illegible] 30-03-2023

[signature] 30.3.23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
முறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகை பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
30.3.23 at 10.30 hrs

Name: பெயர் R.D. Ravi Kumar
Rank: நிலை Inspector of Police No. எண்
VAC, Salem

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 2/AC/2023 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை படிவம் வரிசை எண் 12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>: சேலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் இன்று 30.03.2023 ந் தேதி 07.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்தபோது சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகா, சிக்கம்பட்டி கிராமம், பெரியகாடம்பட்டி காட்டுவளவு, மங்கானூர், 9c1ச் சேர்ந்த சீரங்ககவுண்டர் மகன் திரு. S. ஆறுமுகம் என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தார். அப்புகாரின் விபரம் பின்வருமாறு.

அனுப்புநர் S.ஆறுமுகம்(58), த/பெ. சீரங்ககவுண்டர், 9c1, மங்கானூர், பெரியகாடம்பட்டி காட்டுவளவு, சிக்கம்பட்டி கிராமம், ஓமலூர் தாலுக்கா, சேலம். பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்சஒழிப்புத்துறை, சேலம். அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி பெயர் மாதேஸ்வரி. எங்களுக்கு ஒருமகன் உள்ளார். அவர் பெயர் கலைச்செல்வன். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது நான் கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன். நானும், என் குடும்பத்தாரும் ஒரு குடிசை வீட்டில் எனக்கு சொந்தமான பட்டா நிலத்தில் குடியிருந்து வந்தோம். கடந்த 2020 வருடம் பிரதமமந்திரி குடியிருப்புத் திட்டத்தில் தார்சு வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் 27.1.2021ம் தேதி எனக்கு ஓமலூர் வட்டாரவளர்ச்சி அலுவலகத்தில் இருந்து ரூ.1,70,000/—க்கு வீடு கட்டுவதற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டது. அதில் முதல் தவணையாக ரூ.26,681/—ஐ எனது வங்கி கணக்கில் போட்டார்கள். அந்த பணத்தை வைத்து எனது மனைவி பெயரில் இருந்த 3 செண்ட் நிலத்தில் நானும் எனது மனைவியும் சேர்ந்து வீடுகட்ட ஆரம்பித்தோம். பின்னர் படிப்படியாக வீடு கட்டிய ஒவ்வொரு நிலையிலும் எனது வங்கி கணக்கில் பணம் போடப்பட்டது. அதை வைத்து நான் முழுமையாக எனது வீட்டை கட்டிமுடித்தேன். நானும் எனது மனைவியும் சேர்ந்து மேற்படி வீடு கட்டியதற்கு கூலியாக தரவேண்டிய பணம் சுமார் ரூ.20,000/— மட்டும் தரப்படாமல் உள்ளது. அதற்காக நான் சிக்கம்பட்டி பஞ்சாயத்தில் பணிபுரியும் செயலாளர் திரு.கௌரிசங்கர் என்பவரை 2022ம் வருடம் டிசம்பர் மாதத்தில் ஒருநாள் சிக்கம்பட்டியில் உள்ள அவரது அலுவலகத்திற்கு

சென்று அவரை சந்தித்து எங்களுக்கு வரவேண்டிய கூலிதொகையை கேட்டேன். அப்போது அவர் வேலை செய்ததற்கான ஜாப்கார்டு பற்றி என்னிடம் கேட்டார். ஏற்கனவே எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும் வைத்திருந்த ஜாப்கார்டை கொடுத்தோம். அந்த சமயத்தில் அவர் NMRபில் தயார் செய்து ஓமலூர் BDO அலுவலகத்திற்கு அனுப்ப தனக்கு லஞ்சமாக ரூ.5000/–ம் தரவேண்டும் எனகேட்டார். ஆனால் என்னால் தற்போது அவ்வளவு தொகை தரமுடியாது என்றும், பின்னால் பார்க்கலாம் என்றும் கூறி விட்டு வந்து விட்டேன். மீண்டும் 9.3.2023ம் தேதி சிக்கம்பட்டி பஞ்சாயத்து அலுவலகத்தில் சென்று அவரை சந்தித்து பில் சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம் பணம் ரூ.5000/– கொண்டு வந்தாயா என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் ரெடி செய்ய முடியவில்லை என்றும், நான் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருகிறேன் என்றும் கெஞ்சிகேட்டேன். அதனால் அவர் 2000ம் ரூபாய் குறைத்துக் கொண்டு ரூ.3000/– கொடுத்துவிடு என்று கண்டிப்பாக கூறி அனுப்பினார். மீண்டும் 27.3.2023ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு சென்று அவரை அலுவலகத்தில் சந்தித்து எனது NMRபில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் ரூ.3000/– இல்லாமல் உனக்கு வேலை செய்து தரமுடியாது என்று கராராக கூறி அனுப்பிவிட்டார். இப்போது என்னிடம் பணம் ரூ.3000/– ரெடியாக உள்ளது. அந்த பணத்துடன் திரு.கௌரிசங்கரை சந்திக்க தயாராக உள்ளேன். மேற்படி பணத்தை லஞ்சமாக கொடுத்து வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை ஆகவே அவர் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxx (S.ஆறுமுகம்) 30.03.2023.

Sir, Received the above computer typed complaint on 30.03.2023 at 07.00 Hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case *in Salem Vigilance and* Anti-Corruption Cr.No.2/AC/2023 u/s 7 (a) of the *Prevention of Corruption* (Amendment) Act 2018 at 09.00 Hrs. today on *30.03.2023 and* take up investigation. Sd xxxx (R.D.RAVIKUMAR) 30.03.2023, Inspector of Police, V&AC, Salem.

Original FIR along with Original Computer typed complaint of Tr.S.Arumugam, S/o Tr.D.Srirangagoundar, 9C1, Mangaanoor, Periyakadampatti Kattuvalavu, Sikkampatti Village, Omalur Taluk, Salem District is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under the Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(R.D.RAVIKUMAR),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.